செ.வெ.எண் : 89 பத்திரிகை செய்தி 27/1/2012

# பதிவுத்துறை சீராய்வு கூட்டம்

## வணிகவரி, பதிவுத்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை அமைச்சர் அவர்களின் பதிவுத்துறை வருவாய் மற்றும் சமாதான திட்ட பணி முன்னேற்றம் குறித்த சீராய்வு கூட்டம்

**சென்னை - 27.01.2012**

தமிழ்நாடு அரசு பதிவுத்துறையின் வருவாய் மற்றும் சமாதான திட்ட பணி முன்னேற்றம் குறித்த சீராய்வு கூட்டம் மாண்புமிகு வணிகவரி, பதிவுத்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களின் தலைமையில் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் இன்று (27.01.2012) முற்பகல் நடைபெற்றது இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறையின் முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் மற்றும் இதர இனங்கள் குறித்த வருவாய் முன்னேற்றம் குறித்தும் இத்துறைக்கு புதிய கட்டிடங்கள் கட்டுதல், சார்பதிவாளர் மற்றும் பதிவுத்துறை அலுவலகங்களில் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல், பதிவுத்துறையின் பொதுமக்களுக்கு தடையற்ற, விரைவான சேவை வழங்குதல் ஆகிய இனங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். சென்ற 2010-11ம் நிதி ஆண்டில் டிசம்பர் மாத இறுதியில் பதிவுத்துறையின் வருவாய் வசூல் **ரூ.3670.77** கோடியாகும். ஆனால் 2011-12ஆம் நிதியாண்டில் இதே கால அளவில் **ரூ.4744.40** கோடி வருவாய் பதிவுத்துறையால் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் **29.25** சதவிகிதம் கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அதாவது **ரூ.1073.63** கோடி அதிகமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவுத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் வருவாய் இலக்கு **ரூ.6492** கோடி அடைய வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

முத்திரைச் சட்டம் பிரிவு **47A** என்ற பிரிவின் கீழ் கடந்த ஆட்சியின் போது **39812** ஆவணங்கள் பொதுமக்களுக்கு திருப்பி வழங்கப்படாமல் முடங்கிக் கிடந்தன. இதனால் அரசுக்கு வரவேண்டிய **ரூ.541.31** கோடி வருவாய் வசூலிக்க இயலாமல் இருந்தது. இந்த வருவாயை ஈட்டும் நோக்கத்துடனும், பொதுமக்கள் தங்களது விலைமதிப்பற்ற ஆவணங்களை திரும்பி பெற்றுச்செல்ல வேண்டும் என்று நோக்கத்துடனும், புதிய அரசு பொறுப்பேற்றவுடன் பொதுமக்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் **மூன்றில் ஒரு பகுதி (1/3)** தள்ளுபடி செய்து **சமாதான திட்டம்-2011** என்ற பெயரில் ஒரு சலுகை திட்டம் **01.11.2011** அன்று அரசால் வெளியிடப்பட்டது. இந்த திட்டத்தால் பொதுமக்கள் அடைந்த பயன் மற்றும் பதிவுத்துறையால் ஈட்டப்பட்ட வருவாய் ஆகிய விவரங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் விரிவாக ஆய்வு செய்தார். அவ்வமயம் சமாதான திட்டத்தின் கீழ் **24.01.2012** தேதி வரை **14544** ஆவணங்கள் முடிவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு திரும்ப வழங்கப்பட்டன என்றும், இதனால் அரசுக்கு **ரூ.79.13** கோடி வருவாய் ஈட்டப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. சமாதான திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள அனைத்து ஆவணங்கள் மீதும் பயனுள்ள நடவடிக்கை மேற்கொண்டு இவ்வாவணங்களில் முடங்கியுள்ள அரசுக்கு சேரவேண்டிய வருவாயை முழுமையாக வசூலித்திட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் பதிவுத்துறை அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால் இ.ஆ.ப, பதிவுத்துறைத் தலைவர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப மற்றும் பதிவுத்துறை உயர்அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு, இயக்குநா,
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை**
**சென்னை-9**